காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

நரி பரியான நாடு

மலர் 1 4—4—65 இதழ் 34

"முதுகுத் தோலை உரித்துவிடுவேன்! கன்னம் பிய்ந்துவிடும்படி அறைவேன்! முட்டிக்கு முட்டித் தட்டி விடுவேன்" என்றெல்லாம் இல்லத்தின் பெரியவர் பேசும்போது, கோபம் எழும்; ஆனால் அந்தப் பெரியவர், "அப்பா! இப்படி எல்லாம் செய்யாதே! கைகூப்பி உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன், மண்டியிட்டு உன்னை வேண்டிக்கொள்கிறேன். தவறான வழி நடவாதே; தலை இறக்கம் ஏற்படும்படிச் செய்து விடாதே; குடும்பத்தின் நற்பெயரைக் கெடுத்து விடாதே" என்று உருக்கமாக வேண்டிக்கொண்டால், தவறு செய்திடுபவனின் மனநிலை எப்படி இருக்கும்? கண்களில் நீர்மல்கும், தலை தன்னாலே கவிழும், வேதனை உள்ளத்தைப் பிய்த்துவிடும், வெட்கம் வேலாகிப் பாயும்; தாளில் வீழ்ந்து; தன் கண்ணீரால் கழுவி விடலாமா என்று தோன்றும்.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்து வந்த தேபர், கோபத்துடன் தாக்கவில்லை, வேதனையுடன் உருகிய நிலையில், பேசியிருக்கிறார், தவறான வழியிலே சென்றுவிட்டிருக்கும் காங்கிரஸ் கட்சியைத் திருத்துவதற்கு.

தவறான வழி சென்றிடுவோனைத் தாக்கித் திருத்த முயலுவதைவிட, அவன் மனதில் உண்மை உறுத்தும்படி, வேதனைக் குரலில் விம்மிடுவது பலன் தரும் என்று தேபர் எண்ணுகிறார். அது அவருடைய பண்பினை உணர்ந்துகொள்ள வைக்கிறது; ஆனால் அவர் எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமா என்பதுபற்றி அய்யப்பாடு கொள்ளவேண்டி இருக்கிறது.

தேபர் ஒரு மாநிலத்தில் அரசோச்சி வந்தவர்; காங்கிரஸ் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காகப் பதவியை விட்டு விலகியவர்; காந்தீய நெறி நிற்பவர் என்ற பாராட்டுதலைப் பெற்றிருப்பவர்.

ஆட்சி நடாத்திவரும் காங்கிரசுக் கட்சியின் போக்கு கண்டு அவருடைய மனம் வெந்துபோயிருக்கிறது; காந்தீய நெறி மறந்து காங்கிரஸ் அரசு நடந்து கொள்வது அவருக்கு வேதனையை மூட்டிவிட்டிருக்கிறது. அடக்கிக்கொள்ள முடியாத நிலையினராகியுள்ளார். ஆனால் அந்த நிலையிலும், ஆத்திரம்கொண்டு காங்கிரஸ் அரசைத் தாக்கவில்லை; மாறாகத் தன் மனவேதனையைக் கொட்டிக் காட்டி இருக்கிறார்; திருந்தும்படிக் காங்கிரஸ் ஆட்சியினரை வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கோபம் கொண்டு சிலர் தாக்கும்போது, கூடிப் பங்கு பெறுவோரும், கொடிதூக்கி ஆதாயம் அடைவோரும், இப்படியா கட்சியைக் காட்டிக் கொடுப்பது! இது பதவி கிடைக்காததால் ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவு; எரிச்சலின் விளைவு என்று ஏசிடக் கிளம்புவர். தேபர் பேசியிருப்பது, ஆத்திரம் கொண்டவரின் பேச்சுமல்ல; பதவி கிடைக்காததால் எரிச்சல் கொண்ட நிலையும் அவருக்கு இல்லை. எனவே அவருடைய வேதனைக் குரலை வேறு நோக்கம் காட்டி மறைத்துவிட முடியாது. மகத்தான காங்கிரஸ் கட்சியிலே தூண்கள், துந்துபிகள், நடுநாயகர்கள், வேறு பலர் உளர்; இவர் 'சாதாரணம்' ஆகவே இவருடைய பேச்சைப் பெரிதாக எண்ணிக்கொள்ளத் தேவையில்லை என்றும் கூறிவிடுவதற்கில்லை; இவர் முன்னாளில் காமராஜராக இருந்துவந்தவர்; ஏனோதானோவுமல்ல, எங்கிருந்தோ வந்ததுமல்ல, இளித்துக் கிடப்பதுமல்ல.

எனவே இவருடைய பேச்சு உண்மையான காங்கிரஸ்காரரின் உள்ளத்தை நிச்சயமாக உலுக்கிடச் செய்திடும்.

ஊராள்வோரின் உறவு சுவையுள்ளது என்றெண்ணிக்கொண்டு ஒட்டிக் கொள்பவைகள் தேபரின் பேச்சினைக் கேட்டுக் கலங்கமாட்டார்கள். ஆனால் உலகப் பெரும் வல்லரசுகளில் ஒன்றான பிரிட்டிஷ் பேரரசை விரட்டப் போர் நடாத்திய கட்டத்தில் காங்கிரசில் இருந்தவர்கள், தேபரின் பேச்சைக் கேட்டுப் பதறிப் போவார்கள்.

மார்ச் திங்கள் 28-ம் நாள் பஞ்சாப் தலைநகரான சந்திகாரில் பேசினார் தேபர், கேட்போரின் மனம் உருகும்விதமாக,

"கைகூப்பி, முழந்தாளிட்டு, நான் டில்லிக்கும் சந்திகாருக்கும் முறையிட்டுக் கொள்கிறேன் காந்தியார் காட்டிய வழியில் செல்லுங்கள் என்று. காந்திய நெறி என்ன? செல்வம், அரசியல் அதிகாரம் ஆகியவற்றினைவிட மனிதன் மேம்பட்டவன்—மனிதனை மதிக்கவேண்டும்—என்பது. அந்த காந்திய நெறியை மறந்துவிட்டார்கள் என்பதை எண்ணும்போது மனச்சோர்வு ஏற்படுகிறது. அரசியல் அதிகாரத்தைப் பெறவும், செல்வம் சேர்க்கவும், முதலாளிகளின் தொழில் வளம் பெருக்கவும் மனிதனைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்; மனித மேம்பாட்டுக்காக அல்ல. இன்று பெரியதொழிற்சாலை முதலாளிகளின் பலம்தான், ராஜாக்களின் பலத்தை விட, லால்பகதூர்களின் பலத்தைவிட அதிகமாக வளர்ந்திருக்கிறது."

எவ்வளவு வேதனையைத் தேபர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார் என்பது; "கைகூப்பிக் கேட்டுக்கொள்கிறேன்; மண்டியிட்டு மன்றாடுகிறேன்" என்று பேசியிருப்பதிலிருந்து தெரிகிறது.

காங்கிரஸ் என்ற பெயர் மட்டுமே இன்று இருக்கிறது; ஆனால் அதிலே காங்கிரசுக்கு என்று அமைந்திருந்த 'குறிக்கோள்' இல்லை; அந்தக் குறிக்கோளை மதித்து நடப்பவர்களின் தொகை மிகமிகக் குறைந்து விட்டது; போலிகளே கொலுவிருக்கிறார்கள் என்று நாம் கூறும்போது ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது காங்கிரசில் உள்ளவர்களுக்கு — அதிலும் புதிதாக விற்பனையாளர் வேலை பார்க்கச் சென்றவர்களுக்கு. இன்றைய காங்கிரஸ் ஆட்சி எப்படி ஆகிவிட்டிருக்கிறது என்பது, காங்கிரசின் வளர்ச்சிக்காகக் காலமெல்லாம் பாடுபட்ட தேபர்களுக்கு வேதனை தருகிறது.

தேபர், சட்டம் நிறைவேற்றப்படும் முறை குறித்தும், பலன் ஏழைகளுக்குப் போய்ச் சேராதது பற்றியும், புள்ளி விவரத்துடன் பேசினாராம்.

திட்டங்கள் போட்டபடி இருக்கிறோம். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டமோ வளர்ந்தபடி இருக்கிறது என்பதனையும் எடுத்துரைத்தாராம்.

தேபரின் இந்தப் பேச்சை, உடனிருந்து கேட்டுக் கொண்டிருந்தார் பஞ்சாப் முதலமைச்சர் ராம்கிஷண் என்று செய்தி தெரிவிக்கிறது.

தூய்மை நிரம்பிய, காந்திய வழிநடந்த அன்றைய காங்கிரசை எண்ணிக்கொண்டு இன்றையக் காங்கிரசை ஆதரிப்பது அறமுமாகாது நல்அரசுக்கும் வழிகோலாது என்று நாம் கூறும்போது முகத்தைச் சுளித்துக்கொள்வோர், தேபர், தேம்பித் தவித்திடும் நிலையினராகிப் பேசி இருப்பது கண்டு தெளிவு பெறவேண்டும்.

தேபர், கைகூப்பி பணிந்து வேண்டிக் கேட்டுக் கொண்டார்; இது சரியான முறையல்ல; இவ்விதம் பேசுபவர், 'பரமசாது' என்ற பட்டியலில் இடம் பெறலாமேயன்றி காங்கிரசைத் திருத்தமுடியாது; இடித்துக் காட்டவேண்டும், அச்சம் தயை தாட்சணியம் கூடாது; நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற போக்கே பயன் அளிக்கும் என்ற கருத்துடன் பேசியிருக்கிறார், முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ணமேனன்.

இவரும் அலட்சியப்படுத்தத் தக்கவர் அல்ல; அதிலும் நமது மாநிலத்தில் இவர் பதவி இழந்த பிறகு, காமராஜரின் தலைமையிலேயே, வரவேற்பு அளிக்கப் பெற்றவர்; கிருஷ்ணமேனனை மீண்டும் மந்திரியாக்க ஒரு இயக்கமே நடத்தப்போவதாகப் பேசினார்கள். இங்குதான்! ஆகையால் அவரை இப்போது வெறும் ஆள்—விவரமறியாதவர் — விஷமி — என்று கூறிவிட முடியாது.

அவர் சென்ற கிழமை, காதைப் பிடித்துத்திருகி, இனி ஒழுங்காக நடந்துகொள்கிறாயா? என்று கண்டிப்பவர்போல, காங்கிரஸ் அரசின் போக்கை மிக வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

சமதர்ம நோக்குடைய எவரும் பதறிடத்தக்க குற்றங்களைக் காங்கிரஸ் அரசு செய்திருப்பதாக மேனன் பேசினார்.

தனியார்துறைக்குச் சலுகைகாட்டி முதலாளிகளைக் கொழுக்கவைத்திருப்பது.

பணக்காரர்களுக்குச் சாதகமான முறையில் 'பட்ஜட்' தயாரித்திருப்பது.

போலியான கணக்கும் காரணமும் காட்டி பட்ஜட்டைச் செம்மையானது என்று கூறிவருவது.

அன்னிய நாட்டு முதலாளிகளுக்கு அதிக அளவில் இடம் கொடுத்து, புதிய ஏகாதிபத்தியம் அமைந்துவிடும் எதிர்கால ஆபத்தைத் தேடிக்கொள்வது.

இவ்விதம், மிகப்பலமான கண்டனம் கிளம்பிற்று மேனனிடமிருந்து.

இவை இரண்டினையும் தூக்கி அடிப்பதுபோல, உலகப்புகழ் பெற்றவரும், பண்டிதரின் உடன்பிறந்தாரும், பல பதவிகளில் இருந்தவரும், பாராளுமன்றம் சென்று பணியாற்றவேண்டும் என்பதற்காகவே கவர்னர் பதவியை உதறித் தள்ளியவருமான விஜயலட்சுமி பண்டிட் பேசிவிட்டார், பேச்சா அது! காதைப்

பிடித்துத் திருகி, தலையில் "குட்டி, 'மக்கு! மக்கு!' என்று ஏசுவாரே பழைய நாட்களில் திண்ணைப் பள்ளிக்கூடத்து ஆசிரியர் அவ்விதம் இருந்திருக்கிறது அம்மையாரின் அர்ச்சனை.

மந்தமான போக்கு

குழப்பமான நிலை

தயக்கம்! தடுமாற்றம்!

சொல்வேறு! செயல்வேறு!

உதட்டளவில் சோஷியலிசம்

பணக்காரரைக் கொழுக்கவைப்பது.

கண்மண் தெரியாமல் கடன் வாங்குவது.

சோற்றுக்கே அமெரிக்காவை எதிர்பார்க்கும் கேவலம்.

மக்களை ஈர்க்கக்கூடிய இலட்சியம் அற்ற தன்மை.

சரமாரியாக! சுடச்சுட! வேகவேகமாக! திணறத்திணற! எதிர்க்கட்சியினர் கூறிடக்கூசுவதை எல்லாம், கார சாரமாக!!

விஜயலட்சுமி அம்மையாரின் 'சவுக்கடி, உள்ள படி, அதிர்ச்சி கொடுக்கத்தக்கதாக இருந்திருக்கிறது.

மூவர், மூன்று முறைகளில் முறைதவறிச் சென்று கொண்டிருக்கும் காங்கிரஸ் அரசைத் திருத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், திறமையாகப் பதிலளித்தாராம்!

திறமை இருக்கட்டும் ஒருபுரம், நிலைமையைக் கவனிப்போம் முதலில்.

காங்கிரஸ் கட்சியின் மூலவர்கள், முன் வரிசையினர் எனப்படவேண்டிய மூவர், காங்கிரஸ் அரசின் போக்கை, மனம் நொந்து கண்டித்துள்ளனர்.

ஏழைகளுக்காக இல்லை இந்த ஆட்சி; சமதர்மம் பேசுவது மக்களை மயக்கவே — என்பதனை வெட்ட வெளிச்சமாக்கிவிட்டனர். மூவரும், இன்று நேற்றுக் காங்கிரசில் குடியேறியவர்களல்ல—காடு சுற்றி கடும் கொடுமைகளை ஏற்றுக்கொண்ட காலத்தில் காங்கிரசில் ஈடுபட்டிருந்து இன்னல்களை ஏற்றுக்கொண்டவர்கள். இன்றைய நிதிஅமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், சீமையிலிருந்து வந்த சோப்புச் சீமான்களுடன் குலவிக்கொண்டு மாளிகை வாழ்வை மேற்கொண்டு, எதிர்க்கட்சிப் பிரமுகராக இருந்துவந்த நாட்களில், இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கிடைக்கும் என்ற எண்ணமே கனவு அளவாகக்கூட இல்லாத நாட்களில் இடர்பட்டு, சபர்மதி முனிவரின் தொண்டர்களாகப் பணியாற்றி வந்தவர்கள், அந்த மூவரும்.

அந்த மூவரும் காங்கிரஸ் அரசு தவருனபோக்கில் செல்கிறது, மக்களை ஏய்க்கிறது, சீமான்களுக்குச் சாமரம் வீசுகிறது, என்று கண்டு மனம் நொந்து, தமது கண்டனத்தைத் தெரிவிக்கிறார்கள்; இந்தியாவின் விடுதலைக்காகச் சிறு விரலையும் நசுக்கிக்கொள்ளாமல், சொகுசான வாழ்க்கையில் மூழ்கி இருந்துவிட்டு இப்போது காங்கிரஸ் அரசில் நிதி அமைச்சராக இடம் பெற்றுள்ள டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், வாதாடுகிறார், காங்கிரஸ் அரசின் போக்கை ஆதரித்து. எத்தனை விசித்திரம்! வேதனை நிரம்பிய விசித்திரம்!!

இனி அடுத்ததாக, பிரிட்டனில் இருந்து சர்ச்சில் குடும்பத்தில் ஒருவர் இங்கு வந்து பேரரசில் பதவி வகித்துக்கொண்டு, காங்கிரஸ் அரசு கெட்டுவிட்டதே என்று இந்திராகாந்தி அவர்கள் பேசுவதற்கு மறுப்பளிப்பார்போலிருக்கிறது. காந்தியாரின் வழிவழி வந்தவர்கள் இப்படியா துப்பாக்கித் துரைத்தனம் நடத்துவது என்று லால்பகதூர் கேட்கவும், ஜெனரல் டயர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இந்தியா வாசியாகி, பேரரசில் உள்துறை அமைச்சருமாகி, திறமையாகப் பதில் அளிப்பார் போலும்! என்னென்ன விசித்திரமான மாறுதல்கள்! எத்தனை வேதனை நிரம்பிய மாறுதல்கள்!!

காங்கிரஸ், அரசாளும் நிலையினின்றும் கீழே இறக்கப்பட்டாலொழிய சிறை சென்ற காங்கிரஸ்காரர் சிந்தை நைந்துருகி, தேபர் போலப் பேசுவதும், அதற்கு ஏகாதிபத்தியத்தில் எடுபிடியாக இருந்தவரின் வழி வந்தவர், திறமையாகப் பதில் அளிப்பதுமான விந்தை நடைபெருமல், தடுத்திட முடியாது.

கூவம் தண்ணீரைக் கொண்டு பன்னீருக்கு மணம் ஊட்டுவதுபோல, சீறிடும் சிறுத்தை சாதுவாக எப்படி இருப்பது என்று ஆடுகளுக்கு அறிவுரை கூறிட முற்படுவதுபோல, காகம் பள்ளி நடத்தி குயிலுக்குக் கானம்கற்பிப்பதுபோல, எத்தனையோ விந்தைகள், அரசியல் உலகிலே நடக்கும்போலிருக்கிறது! நரி பரியான நாடல்லவா!!

*

அட்டையில்

பாராளுமன்றத்தில், பண்டித ஜவஹர்லாலின் உடன்பிறந்தார், விஜயலட்சுமிபண்டிட், லால்பகதூர் சர்க்காரைப் பாராட்டுவதாகத் துவக்கி, மிக வன்மையாக லால்பகதூர் சர்க்காரைக் கண்டித்துப்பேசி, காங்கிரஸ் கட்சியைத் திணற அடித்தார்.

தம்பி

தன்னை வெல்வான் தரணியை வெல்வான்!

இலைகள் உதிர்ந்த நிலையில் சில மரங்கள்; இது முழுவதும் வெட்டவெளி அல்ல என்பதைக் காட்டுவதற்காக இருந்துகொண்டிருந்தன—மற்றப்படி அந்த இடம் இயல்பாகவே வெப்பத்தை அதிகமாக்கிக்காட்டக்கூடிய இடம்.

முப்பது அறைகளுக்கு மேல் இருக்கும்—அதிலே ஒரு அறையில் தம்பி கருணாநிதி—மற்ற அறைகள் எல்லாம் பூட்டிக்கிடந்தன. மொத்தத்தில் ஒருவிதமானவெறிச்சோடிய நிலை. ஆள் நடமாட்டம் இல்லை என்பது மட்டும் அல்ல; பேச்சுச் சத்தம்கூடக் காதிலே விழ முடியாத இடம். அத்தனை தனிமை! அவ்வளவு 'பாதுகாப்பு'! பக்தவத்சலனாரின் அரசு என்ன இலேசுப்பட்டதா! அவர்தானென்ன சாமான்யமானவரா-இந்தியப் பேரரசின் போலீஸ் அமைச்சர் நந்தாவினாலேயே பாராட்டப்பட்டவர்—கற்பாறைபோல் நின்றார் என்பதாக!

பாதுகாப்புச் சட்டப்படி சிறைபிடித்து வைத்திருப்பதால், மிக்க பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும் என்பது முதலமைச்சரின் திட்டம்போலும். அதனால்தான், பக்கத்திலேயே உள்ள இளம் குற்றவாளிகளுக்கான சிறைக் கட்டடத்தில் பல நூறுபேர் இருக்க, கருணாநிதிக்காகவே ஒரு பெரிய தனிச்சிறையை ஒதுக்கி, அதிலேயும், தனியாக வைத்திருக்கிறார்கள்.

மக்களைப் பெற்றவர்கள் மனம் நொந்து, ஏனோ இந்தக் கொடுமை என்று கண்ணீர் மல்கிடும் நிலையில் இருந்தபடி கேட்பார்கள். கேட்டால் என்ன! பக்தவத்சலனாரா இதற்கெல்லாம் அசைவார்! கற்பாறைபோலநின்றார் என்று சிறப்புப்பட்டம் பெற்றுவிட்டாரே!! தீக்குளித்து இறந்தவர்களை எண்ணி எண்ணி இந்த நாடே பதறுகிறது, கதறுகிறது; நல்லோர் அனைவரும் நெஞ்சு நெக்குருகிப் போயினர்; இந்திக்காரர்களிலேகூடச் சிலர், செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்; ஆனால் முதலமைச்சர் மட்டும்தான், இதயத்தை எடுத்துத் தனியாக வைத்துவிட்ட நிலையினர்போலாகி, துளியும் ஈவு இரக்கம், மனிதத்தன்மை அற்றவராகி, தோழர் மதியழகன் மெத்த மனவேதனையுடன் குறிப்பிட்டுள்ளதுபோல, தீக்குளித்த தீரர்களின் பிணங்களின் மீது தூற்றல் சேற்றினை வாரி இறைக்கிறார். எதிர்காலக் காவியமாகப்போகிற எழுச்சிமிக்க தியாகத்தை, இன்று கிடைத்துள்ள இடம் என்றென்றும் தமக்கு என்ற ஏமாளித்தனம் மிகுந்த இறுமாப்பு உணர்ச்சியுடன் எண்ணிக்கொண்டு, இழித்துப் பேசுவதும், பழித்து உரைப்பதும், தமிழ் மண்ணின் மாண்பினையே மங்கிடச் செய்திடும் மாபாதகச் செயல். ஆனால் துணிந்து செய்கிறார்கள் துரைத்தனம் நடாத்துவோர்.

சென்னையிலிருந்து நானூறுகல் தொலைவில், பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் போட்டடைத்துக் கொடுமை செய்வதனைத் தமிழகம் கேட்டுத் தத்தளிக்கிறது; விம்மிடுகின்றனர் தாய்மார்கள்; இப்படி ஒரு ஆட்சியா என்று கேட்டுத் துடிக்கின்றனர் முதியோர்கள்;



நம்மை இத்தனைத் துச்சமாக எண்ணிவிட்டனரே என்றெண்ணி வேதனைப்படுகின்றனர் இளைஞர்கள்; அறம் அறிந்தவர்கள் பதறுகின்றனர்; சட்டம் தெரிந்தவர்கள் இதற்குப் போதுமான நியாயம் இல்லை என்று எடுத்துரைக்கின்றனர்; கழகத் தோழர்கள் கலக்கமடைந்துள்ளனர்; முதலமைச்சர் மட்டும் நிற்கிறார் கற்பாறை போல!

காலை மணி பத்து இருக்கும், நான் அங்கு சென்ற போது; உடன் வந்திருந்த நெல்லை நகராட்சி மன்றத் தலைவர் மஜீத், வழக்கறிஞர் இரத்தினவேலுபாண்டியன் மற்றும் பலரையும் தனியே இருக்கச் செய்துவிட்டு, என்னை மட்டும், சிறை அதிகாரிகள் மூவர், கருணாநிதி இருந்த சிறைக்கூடம் அழைத்துச் சென்றனர்.

சந்தித்துப் பேசுவதற்காக ஒரு அறை தயாரிக்கப் பட்டிருந்தது; இரு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

கருணாநிதி அழைத்துவரப்பட்டபோது, முன்பு பல முறை ஒருவரை ஒருவர் சிறையினில் சந்தித்ததுண்டு என்றபோதிலும், இம்முறை தனியானதோர் தவிப் புணர்ச்சி எழுந்து வாட்டியது. அதனை அடக்கிக் கொள்வது கடினம் என்றபோதிலும், கலக்கம் காட்டுவது நமது உள்ளத்தின் உறுதிபற்றி மற்றவர்களுக்கு அய்யப்பாடு ஏற்படுத்திவிடுமே என்ற அச்சம் துணை செய்தது; தவிப்புணர்ச்சியைத் தள்ளிவைத்துவிட்டு, அரைமணி நேரத்திற்குமேல் பேசிக்கொண்டிருந்தோம்.

முன்னாள் நள்ளிரவிலேயே நான் நெல்லைபோய்ச் சேர்ந்துவிட்டேன்; விடிந்ததும் என் காதில் விழுந்த முதல்செய்தி, மாறனைப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்துவிட்டிருக்கிறார்கள் என்பது. நெல்லைக்குக் கிளம்புவதற்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து தொலைபேசி மூலம் மாறனிடம் பேசினேன்–கைது செய்யப் படக்கூடும் என்ற குறிகள் தென்பட்டிருந்தால்கூட என்னிடம் சொல்லி இருந்திருப்பார். ஆகவே, நெல்லையில் நான் கேள்விப்பட்ட செய்தி என்னைத் தூக்கி வாரிப் போட்டது. அடுக்கடுக்காக வந்துகொண்டிருக்கும் இந்தக் கொடுமைகள், இறுதியில் நமது கழகத்தைப் புடம்போட்டெடுத்த பொன்னாக ஆக்கிடும் என்ற பொது உண்மை தெரியும் – மிக நன்றாகத் தெரியும் என்றபோதிலும்–இப்போது நமது கழகத் தோழர்கள் அடக்குமுறைத் தீயிலே தள்ளப்பட்டுக் கொடுமைகளால் தாக்கப்பட்டு வருவதைக் காணும்போது என்னால், பீறிட்டுக்கொண்டு கிளம்பும் வேதனையை அடக்கிக்கொள்ள முடியவில்லை. உள்ளம் மேலும் உறுதிப் பட வேண்டும் என்று தோன்றுகிறது.

கொடுமைகள் இழைக்கப்படும்போது, அநீதி தலைவிரித்தாடும்போது, அக்ரமம் தன் அகன்ற வாயினைத் திறந்து அகோரக் கூச்சலிடும்போது, எல்லாம் இறுதியில் நன்மைக்கே என்ற தத்துவத்தைத் துணைக் கழைத்துச் சமாதானம் தேடிக்கொள்ள முடியவில்லை. காரணம், நாம், ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் என்ற முறையிலே மட்டும் இருந்து வருபவர்கள் அல்லர்; பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பமாகி விட்டிருக்கிறோம்; அதனால் நம்மில் சிலருக்கு இழைக்கப்படும் கொடுமை நம் எல்லோருடைய உள்ளத்தையும் வேதனையில் ஆழ்த்திவிடுகிறது.

ஆனால், நாம் இத்தகைய கொடுமைகளைத் தாங்கிக்கொண்டே தீரவேண்டும். உள்ள நிலை அது. இன்று இங்குள்ள காங்கிரஸ் அரசு, நாட்டிலே ஏற்பட்டுள்ள நிலையைக் காரணமாக்கிக்கொண்டு, கழகத்தை அழித்தொழிக்கத் திட்டமிட்டுவிட்டிருக்கிறது. சுட்டுத் தள்ளவே கூசாத ஒரு ஆட்சி, சிறையில் தள்ளவும் வழக்குகளைத் தொடுக்கவுமா கூசும்! நல்லாட்சிக்குத் தேவையான எல்லா இலக்கணத்தையும் இழந்துவிட்ட நிலையில், கொடுமைகளன்றி வேறென்னகாணமுடியும்? காட்டுப் பன்றியிடமிருந்து உறுமலையும், ஓநாயிடம் இரத்த வெறியையும் தவிர வேறெதைக் காணமுடியும்? ஆட்சி தவறான முறையை மேற்கொள்ளும்போது, நாட்டுக்கும் காட்டுக்கும் உள்ள வேறுபாடு மறைந்துவிடுகிறது.

கவலை கப்பிய நிலையில் கருணாநிதியுடன் பல விஷயங்கள் குறித்துப் பேசிக்கொண்டிருந்தேன்; கருணாநிதியோ, இடையிடையே, தருமபுரி தேர்தல் பற்றியே பேசிடக் கண்டேன்; உடல் நலத்தைக் கவனித்துக் கொள், ஏதேனும் உடல் நலக் குறைவு இருப்பதாகத் தோன்றினாலும் உடனே மருத்துவர் தேவை என்பதைத் தெரியப்படுத்து என்று நான் கூறிக்கொண்டிருப்பேன், இடைமறித்து கருணாநிதி, தருமபுரித் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பணத்தை அள்ளி வீசுவார்களே அண்ணா! அங்கு நாம் வெற்றிபெற வெகு பாடுபட வேண்டுமே! என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன? யாரார் தருமபுரி சென்றுவந்தனர்? நீங்கள் எப்போது செல்லப்போகிறீர்கள்? என்ற இவைபற்றிக் கூறுவார். எனக்குக் கவலையைப் பிய்த்துக்கொண்டு புன்னகை கிளம்பும்.

சிறை மிகச் சக்தி வாய்ந்தது என்று, ஆணவம் பிடித்த நிலையில் உள்ள எந்தச் சர்க்காரும் எண்ணிக் கொள்ளுகிறது. சிறையிலே போட்டு அடைத்ததும், வேதனை வென்றுவிடும்; உணர்ச்சிகள் மங்கிவிடும், உறுதி தளர்ந்துவிடும் என்ற நினைப்பு; நிலைகெடப் போகும் கட்டத்தை நோக்கி நடைபோடும் எந்தச் சர்க்காருக்கும். சிறை அவ்விதமானதல்ல; அந்த இடம், உறுதியைக் கெட்டிப்படுத்தி வைக்கும் உலைக்கூடம்; சிந்தித்துச சிந்தித்துத் தமது சிந்தனைச் செல்வத்தைச் செம்மையாக்கிக் கொள்ளவைக்கும் பயிற்சிக்கூடம். இதனை அறிய முடிவதில்லை, அடக்குமுறைச் சுவையால் நினைவு இழந்துவிடும் அரசுகளால். நெல்லையில் சிறைப்பட்டிருக்கும் கருணாநிதியின் நினைவு முழுவதும் எதன்மீது என்பதனை அறிந்துகொள்வாரானால், முதலமைச்சர் தமது முறை தவறு என்பதனை உணர்ந்து கொள்வார். மக்களின் நலனுக்காக கழகம்; கழகத்தின் சார்பிலே செயலாற்றினேம்; அந்தச் செயலைத் தவறு

னது என்று திரித்துக் கூறி சர்க்கார் நம்மைக் கொடுமைப்படுத்துகிறது; நமக்கு இழைக்கப்படும் கொடுமையினைக் கண்டும் கேட்டும், இலட்சக்கணக்கானவர்கள் இதயம் துடிக்கிறது; அந்தத் துடிப்பிலிருந்து கிளம்பும் மிகப் பெரிய வலிவு எத்தனை பெரிய ஆணவ அரசினையும் வீழ்த்தவல்லது: அந்த வலிவினை நாடு பெற நாம் நமது வலிவிலே ஒரு பகுதியைச் சிறைவாழ்க்கை காரணமாக இழப்பது தேவை, முறை, அறம் என்ற எண்ணம், சிறையில் உள்ளவர்களுக்குச் செந்தேன். அந்தச் சுவையில் திளைத்திருக்கக் கண்டேன், உடல் இளைத்தாலும் உள்ளம் களைத்திடாது என்ற நிலையில் உள்ள கருணாநிதியிடம். ஒரே ஒரு கவலைதான் இருக்கிறது; தருமபுரி பற்றி! ஆனால் அதிலேயும் கவலையை விரட்டியடிக்கக்கூடிய ஒரு நம்பிக்கையும் இருக்கிறது; எப்படியும் கழகம், தருமபுரித் தேர்தலில் வெற்றி பெற்றுவிடும் என்ற நம்பிக்கை. கருணாநிதியைச் சிறையில் போட்டடைத்து வைத்திருக்கிறதே என்பதனை எண்ணி ஏக்கம் கொண்டுள்ளவர்கள், தங்கள் வல்லமையினை, உழைப்பினை, வசதியினை, நேரத்தை, நினைப்பை, தருமபுரிக்காக என்று அனுப்பிக் கொடுத்திடின், வெற்றிபற்றிக் கவலை ஏது! வெற்றி நிச்சயம்! அந்தச் செயலினைச் செம்மையாகச் செய்வார்களா என்ற அய்யப்பாடு அல்ல, கருணாநிதிக்கு, அந்தச் செயலிலே தனது பங்கினைச் செலுத்த முடியாதபடி பக்தவத்சலனார் செய்துவிட்டாரே என்ற கவலைதான். அந்தக் கவலை வேண்டாம், தோழர்கள் திறமையாக, சுறுசுறுப்பாக, மெத்த ஆர்வத்துடன் தேர்தல் காரியத்தைக் கவனித்துக் கொள்கிறார்கள் என்று உறுதி அளித்தேன்.

அதிகாரிகள் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டனர்; அதன் பொருள் விளங்கிற்று; நான் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டேன்; நான் வெளிப்புற வாயிற்படி நோக்கி நடந்தேன்; தம்பி தனக்கென அரசு தந்துள்ள அறைநோக்கிச் செல்வதைப் பார்த்தபடி.

சென்றேன், கண்டேன்; செய்தியை உங்களிடம் கூறினேன்; ஆனால், இதுதானா நாம் ஒருவருக்கொருவர் தந்துகொள்ளவேண்டிய செய்தி? எவ்வளவு முறையாகச் செயலாற்றி வருகிறோம், கழகம் அமைத்து; நமக்கு இத்தகைய கொடுமைகளைக் காங்கிரஸ் அரசு செய்தபடி இருப்பதா! நாடு எத்தனை காலத்துக்குத் தாங்கிக்கொள்ளப்போகிறது இவ்விதமான கொடுமைகளை? எத்தனை எத்தனை கொடுமைகள் நடந்துவிட்டன இன்பத் தமிழகத்தில். மகனை இழந்த மாதாக்கள் கதறுகின்றனரே! எங்கெங்குச் சென்றாலும், நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றியும், துடிதுடித்து மக்கள் செத்ததுபற்றியும், ஊரெல்லாம் சுடுகாடுகள்போலாகிக் கிடப்பதுபற்றியும், நண்பர்கள் கூறிடக்கேட்டுக்கேட்டு வேதனை மேலும் வளருகிறது. எத்தனை எத்தனை வழக்குகள்! எத்தனைவிதமான கொடுமைகள்! நள்ளிரவிலே கைதுகள்! பிடிபட்டவர்கள் நையப்புடைக்கப்படும் இழிதன்மை! ஏன் நமக்கு இழைக்கப்படுகின்றன இவ்வளவு கொடுமைகள்? நிகழ்ச்சிகள் நடைபெற்று நாட்கள் பலப்பல ஓடிய பின், ஒரு திங்களுக்குப் பிறகும் கழகத் தோழர்கள் வேட்டையாடப்படுகின்றனர்; வழக்குகள் தொடுக்கப்படுகின்றன. நெல்லைக்குச் சென்று அங்கிருந்து மாயவரம், பிறகு ஆத்தூர், ராசிபுரம். பிறகு சேலம் தருமபுரி ஆகிய இடங்கள் சென்று வந்தேன், வழிநெடுக இதே செய்தி, ஊரெங்கும் இதே கொடுமை. சித்திரவதையைவிட, ஒரே அடியாகக் கொன்றுபோட்டுவிடுவதுமேல் என்பார்கள்; அதுபோல இப்படிக் கழகத் தோழர்களைக் கண்டகண்ட இடங்களில் விதவிதமான கொடுமைகளுக்கு ஆளாக்குவதைவிட, ஒரே அடியாகக் கழகத்தைத் தடைசெய்து விடலாமே, ஏன் இத்தனை பழிவாங்கும் உணர்ச்சி—வெறித்தனம், புரியவில்லையே, என்று கழக நண்பர்கள் கேட்கின்றனர். காரணம் இருக்கிறது காட்டுமுறையை நாட்டினை ஆள்வோர் கட்டவிழ்த்துவிட்டிருப்பதற்கு.

காங்கிரஸ் ஆட்சிக்குப் பலத்த எதிர்ப்பு மூண்டுவிட்டிருக்கிறது; சமூகத்தின் பல முனைகளிலுமிருந்து. இங்கேயே உள்ள நிலை என்ன? முன்பு கழகம் கிளர்ச்சி நடத்தியபோது, காங்கிரஸ் அமைச்சர்கள் கெம்பீரக் குரலில் முழக்கிவந்தனர், கழகத்தின் கிளர்ச்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை; மாணவர்கள், வழக்கறிஞர்கள், இதழ் நடாத்துவோர், அறிவாலயம் நடத்துவோர் ஆகியோரின் ஆதரவு இல்லை; ஒரு சமூகத்தின் மதிப்புமிக்க முனைகள் இவை; இந்த முனைகளில் கழகத்தின் பேச்சுக்கோ செயலுக்கோ துளியும் ஆதரவு இல்லை; எனவே கழகத்தின் கிளர்ச்சிக்கு அரசினர் மதிப்பளிக்கத் தேவையில்லை; அது தன்னாலே மங்கி மடிந்துவிடும் என்று மார்தட்டிவந்தனர். இப்போது? எந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சியினைக் கழகம் பல ஆண்டுகளாக

பாவையின் பயணம் ரூ. 1—50

அரசாண்ட ஆண்டி ரூ. 1—50

அண்ணாவின் கருத்தோவியம்

மதுரைக்கு டிக்கட் இல்லை ரூ. 2—00

கிடைக்குமிடம்! பரிமளம் பதிப்பகம், சின்ன காஞ்சிபுரம்.

நாட்டிலே எடுத்துக்காட்டிக்கொண்டு வந்ததோ, எந்த இந்தி எதிர்ப்புக்காகக் கழகம் அறநெறிக் கிளர்ச்சியில் ஈடுபட்டு இன்னல்களையும் இழப்புகளையும் ஏற்றுக் கொண்டுவந்ததோ, அந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, மாணவர் உலகினில் பொங்கிடக்கண்டனர் ஆட்சியினர். வழக்கறிஞர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு ஆதரவு தந்திடுவது கண்டனர்; இதழ்கள், இனியும் ஏதும் நடைபெருததுபோல் இருப்பது கூடாது என்ற உணர்வுடன் இந்தி எதிர்ப்புணர்ச்சியின் வேகத்தையும் வடிவத்தையும் அரசினர் அறிந்துகொள்ளச் செய்யும் அரும்பணியினை ஆர்வத்துடனும் திறமையுடனும் நிறைவேற்றி வருவதனைக் காண்கின்றனர்; காண்பதனுல் கிளர்ச்சிக்கு மதிப்பளிக்க முடியாது என்று கூறிவந்த போக்குசுக்கல்நூருகிவிட்டதுமாணவர்களுமா! ஆசிரியர்களுமா, வழக்கறிஞர்களுமா! இதழ் நடாத்துவோருமா!! என்று கேட்டுக்கேட்டு, அரசினர் அதிர்ச்சி அடைந்து விட்டனர். இப்போது அரசினருக்கு ஆதரவாளர் எவர்? என்பதே புரியவில்லை. அவ்வளவு விரிவாகிவிட்டது இந்தி எதிர்ப்புணர்ச்சி.

காங்கிரஸ் கட்சியிலேயே ஒரு பகுதியினர், இந்தி எதிர்ப்புணர்ச்சி கொண்டுள்ளது மட்டுமல்ல, அதனை வெளியே காட்டிக்கொள்வதிலே தயக்கம் காட்டவில்லை, ஆர்வத்துடன் பேசுகின்றனர்.

இங்கிலையில், காங்கிரஸ் அரசு கலக்கம்கொண்டு விட்டிருக்கிறது; எந்த நேரத்திலும் தனது செல்வாக்கு சரிந்துபோய்விடக்கூடும் என்ற அச்சம் பிடித்தாட்டுகிறது.

இத்தனைக்கும் காரணம் இந்தக் கழகம் அல்லவா! தேசியக்கட்சி, சுயராஜ்யத்துக்காகப் போராடிய புனிதக்கட்சி என்ற பாசத்துடன் ஆதரித்துவந்த மாணவர்கள், இன்று எதிர்ப்புசெய்கிருர்களே! நாட்டின் பெரிய கட்சி, நிலையான ஆட்சியை நடாத்திடும் திறமை பெற்றகட்சி என்பதற்காக நம்மை ஆதரித்து வந்தவர்கள் வழக்கறிஞர்கள் — அவர்கள் அல்லவா வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பிவிட்டிருக்கிருர்கள், இந்தியை எதிர்க்க!!

நிர்வாகத் திறமைக் குறைவு; ஊழல் ஊதாரித்தனம், ஆகாத சட்டங்கள், ஆர்ப்பரிப்பு அமுல்கள் என்பவைகளைக் கூடப் பொறுத்துக்கொண்டு, இன்றைய நிலையில், அமைதியான ஆட்சிநடத்திச் செல்லக் கூடிய பக்குவம் பெற்றுள்ள கட்சி காங்கிரஸ் கட்சிதான், மற்றவை நாட்டைக் கெடுத்திடும் நச்சுக் கொள்கை கொண்டவை என்றுகூறி ஆதரவு அளித்து வந்த இதழ்கள் இன்று இந்தி எதிர்ப்புக்கு ஆதரவு திரட்டிடும் பணியிலே மும்முரமாகி விட்டுள்ளனவே! இந்த முனைகளிலே கிடைத்துக் கொண்டுவந்த ஆதரவை இழந்துவிட்டோமே! இனி எதிர்காலம் எவ்விதமோ!! என்று எண்ணும்போது பதவிச் சுவையைப் பருகிப் பழகிவிட்ட காங்கிரஸ் கட்சிக்கு மனம் பதறுகிறது, பார்வையில் பொறி பறக்கிறது, பேச்சிலே தடுமாற்றம் ஏற்படுகிறது.

இத்தனைக்கும் காரணம்? கழகம்! கழகம் ஒழிக்கப் பட்டால், மற்ற முனைகளில் கிளம்பியுள்ள எதிர்ப்பு தன்னுலே முறிந்துவிடும்; ஆகவே, பிடி! அடி! சுடு! என்ற ஆர்ப்பரிப்பு முறையில் அரசு, கழகத்தைத் தாக்கும் செயலில் முனைந்து நிற்கிறது.

கழகம் கூறிடும் பேச்சை, யார் மதிக்கிருர்கள்? எவர் பொருட்படுத்துகிருர்கள்? எவர் ஏற்றுக்கொள்கிருர்கள்? என்று பேசிய இறுமாப்பு இன்று இல்லை; எதை எதையோ பேசுகிருர்கள், மக்கள் நம்பித் தொலைக்கிருர்களே! எப்படி எப்படியோ பேசுகிருர்கள், மக்கள் மனம் மாறிவிடுகிருர்களே!! என்ற அங்கலாய்ப்பு ஏற்பட்டுவிட்டது.

கழக ஏடுகளிலே வரும் சொற்கள், ஆட்சியாளர்களின் ஆணவக்கோட்டை மீது வீசப்படும் வெடிகுண்டுகள் என்ருகிவிட்டன, இன்று. அன்று? சொற்களா? பொருளற்ற பிதற்றல் என்று பேசினர் ஆளவந்தார்கள். அன்று கழகம் எழுப்பிய முழக்கங்களைக் காட்டி, எந்தப் பிரிவின்படி வழக்குத் தொடுக்கலாம் என்று துடித்தபடி உள்ளனர்.

இன்று காங்கிரஸ் அமைச்சர்களின் மேஜைமீது, காந்தியாரின் ஏடுகளும், பண்டித ஜவஹர்லாலின் சுயசரிதமும் இல்லை, பாதுகாப்புச் சட்டத்தின் பிரதிகள்!

பிடி 30ல்! தொடு 41ல்! போடு 54! ஆகட்டும், 147, 148 வீசுக!—இவ்விதம் உள்ளனர்.

கழகத்தின் ஒவ்வொரு அசைவும் அச்சம் தருகிறது ஆட்சியாளர்களுக்கு.

இவர் இவ்விதம் பேசியது எதற்காக? இவர்மீது என்னவிதமான வழக்குத் தொடரலாம்? என்ற இதே நினைப்புடன் உள்ளனர் இன்று—அன்று? கழகமா? தூ! தூ! அதை ஒரு பொருட்டாக மதிப்போமா! யார்

'காஞ்சி' சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா	ரூ. 10—00
ஆறுமாத சந்தா	ரூ. 5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

இருக்கிறார்கள் கழகத்தில்? ஒரு பத்துப் பேர்! இவர்களை நாடு சீந்துமா!! என்று பேசிக்கிடந்தார்கள். கழக ஏடுகளிலே வெளியிடப்படும் கேலிப் படங்கள், ஆட்சியாளர்களின் கண்களைக் குத்துகின்றன, மனதைக் குடைகின்றன; நெஞ்சை அச்சம் பிய்த்து எடுக்கிறது.

இருக்கவே இருக்கிறது பாதுகாப்புச் சட்டம்—அதனை வீசு! பிடித்துப்போடு உள்ளே!! என்கிறார்கள்.

கருணாநிதியை ஏன் சிறைபிடித்தீர்கள்?

அவர் வெளியே இருந்தால் அமைதியைக் கெடுத்துவிடுவார்; அதனால்!!

இப்படி அஞ்சி அஞ்சிச் சாவார்பற்றிப் பாரதியார் அழகாகப் பாடுகிறார்:

அஞ்சி அஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே!

என்றார். கழக ஏட்டிலே வரும் ஒவ்வொரு எழுத்தும், கவிதையும், படமும் கண்டு அஞ்சி அஞ்சிச் சாகின்றார். யார்? எம்மை வீழ்த்தவல்லாரும் உளரோ! நாடே எமது பக்கம் திரண்டு நிற்கிறது! எமது வீரதீர பராக்கிரமம் எப்படிப்பட்டது! வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தையே கிடுகிடுக்க வைத்தவர்கள் நாங்கள்! பிரிட்டிஷ் சிங்கத்தை அதனுடைய குகைக்குள்ளேயே நுழைந்து அதன் பிடரியைப் பிடித்தாட்டியவர்கள்! நாங்களா இந்தக் கழகப் 'பொடியன்களி'ன் பேச்சுக்கும் எழுத்துக்கும் பயப்படுவோம்? சிற்றெறும்பைக் கண்டு சிங்கம் அஞ்சுமோ! எலிக்கூட்டம் கண்டு புலி கிலி கொள்ளுமோ!! என்றெல்லாம் பேசிவந்தவர்கள் இன்று என்ன ஆனார்கள்? கழகப் பேச்சுக்கும் எழுத்துக்கும் ஈடுகொடுக்க முடியாத நிலையினராகி, சட்டத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, அதிலும் பாதுகாப்புச் சட்டத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு. காப்பாற்று! காப்பாற்று! என்று கதறி நிற்கின்றார்கள். அச்சம் விடுக! அலறலை நிறுத்துக! இதோ உமது பக்கம் யாம் நிற்கிறோம்,—என்று அபயம் அளித்துக்கொண்டு, நிற்கிறது அடக்குமுறை! அதன் துணையுடன் துரைத்தனம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், எமது காங்கிரஸ் அரசு, அன்பு வழியை, அகிம்சை வழியை, காந்தியின் சாந்தி வழியைக் கடைப்பிடிக்கும், என்று கூறி வந்தவர்கள்.

உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே!!

என்று கூறிவந்தவர்கள்...பாடி வந்தவர்கள்—இன்று கழகத்தின் அச்சகங்களிலிருந்து வெளிவரும் எழுத்துக்களைக் கண்டு, கிலிகொண்டு, பாதுகாப்புச் சட்டத்தின் துணையைத் தேடிக்கொண்டு ஓடுகிறார்கள்.

எங்கே போனார்கள் ஆட்சியாளர்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட, ஆற்றல் மிக்க எழுத்தாளர்கள்? இம்மென்றால் இருநூறு ஏசலைக் கக்கக்கூடிய பேச்சாளர்கள்! அவர்களிடம் இருந்த 'சரக்கு' தீர்ந்துபோய்விட்டதா! மகாப் பிரபோ! அம்புறாத்தூணியில் கணைகள் இல்லை! வில்லும் ஒடிந்துவிட்டது! இனி உமக்குத் துணை நிற்க இயலாது! ஆகவே மணிமுடியை மறைத்துக் கொண்டு மறைவான இடம் சென்றுவிடும்; சிக்கினால் சீரழிவு ஏற்படும்; சென்றுவிடும் பாதுகாப்பான இடம்! என்று களத்திலே நின்று படை நடாத்தியவன் கை பிசைந்துகொள்ளும் காவலனுக்குக் கூறிய கதை போலாகி விட்டதோ! இந்த ஆட்சியாளர்களுக்கு அவர்களை ஆதரிக்கும் எழுத்தாளர்கள் அவ்விதம் கூறிவிட்டார்கள் போலிருக்கிறது;

> கழகத்தாரின் பேச்சையும் எழுத்தையும் வலிவற்றதாக்க, பொருளற்றதாக்க நாங்கள் எங்களால் ஆனமட்டும் பார்த்தோம்; உரத்த குரல் எடுத்தோம், உருப்போட்டனவைகளை ஒப்புவித்துப் பார்த்தோம், உருட்டி மிரட்டிப் பார்த்தோம், இழிமொழி பொழிந்துபார்த்தோம், பழிச்சொற்களை வீசிப்பார்த்தோம், இட்டுக் கட்டிப்பார்த்தோம், பொய்யும் புனை சுருட்டும் பொழிந்து பார்த்தோம், கலகப் பேச்சை மூட்டிப்பார்த்தோம். வன்முறையைத் தூண்டிடும் பேச்சையும் கொட்டிப்பார்த்தோம்; இத்தனையும் பயன்படவில்லை; இத்தனைக்கும் கிடைக்காத மதிப்பு, அந்தக் கழகத்தாரின் பேச்சுக்கும் எழுத்துக்கும் கிடைத்து வருகிறது; எங்கள் பேச்சை மக்கள் ஏற்க மறுக்கிறார்கள் கழகப் பேச்சும் எழுத்தும் மக்களிடம் எழுச்சியை, விழிப்பை, வீரத்தை, தியாக உணர்வை ஊட்டிவிட்டிருக்கிறது; மேலும் ஊட்டியபடி இருக்கிறது; ஆகவே இனி எமது பேச்சையும் எழுத்தையும் நம்பிடுவது கூடாது; அவை உம்மைப் பாராட்ட, வாழ்த்துக்கூற, வரவேற்பளிக்கமட்டும் வைத்துக் கொள்ளலாம்; இப்போது உடனடியாக எந்தச் சட்டத்தைக் கொண்டாகிலும் கழகப் பேச்சும் எழுத்தும் தடுக்கப்பட வழிசெய்யுங்கள்! உடனே! அவசரம்! அவசரம்!!

என்று ஆளவந்தார்களின் அன்புக்குத் தம்மைப் பாத்திரராக்கிக்கொண்ட சண்டமாருதப் பேச்சாளர்களும் வழுக்கிவிழும் அளவுக்கு ஆத்திரப் போதையினை ஏற்றிக்கொண்டுவிட்டுள்ள எழுத்தாளர்களும், முறையிட்டுக்கொண்டார்கள்போலும்!

இல்லையென்றால், கழக எழுத்துக்கு மறுப்பளித்து மக்களைத் தமது பக்கம் அழைத்துச்செல்ல காங்கிரஸ் கட்சி ஏன் தமது ஆதரவாளர்களான எழுத்தாளர்களைப் பயன்படுத்தாமல், பாதுகாப்புச் சட்டத்தைத் தூக்கி வீசுகிறது!

மற்றெல்லாப் படைக்கலன்களும் தீர்ந்துபோய் விட்டன என்பதையன்றோ இந்தப் போக்கு காட்டுகிறது?

நிலபுலம் விற்றுச் செலவாகியான பிறகு, தட்டு முட்டுச் சாமான்களை விற்றாகிலும் வயிறு கழுவிக் கொள்ள முனைவது போன்ற நிலைக்கல்லவா காங்கிரஸ் கட்சி வந்து விட்டிருக்கிறது.

சாதாரண சட்டம் போதவில்லையே காங்கிரஸ் அரசுக்கு! பாதுகாப்புச் சட்டமே அல்லவா தேவைப் படுகிறது; நிலைமையைச் சமாளிக்க!! நெரித்தபுருவமே போதும் எதிரிகளை முறியடிக்க என்று முடுக்குடன் பேசித் திரிந்தவன், பிறகு அடிஆட்களைத் தேடிஅலைந்த கதை போலாகிவிட்டதே.

முரசொலியில் வெளிவந்த கட்டுரை, படம், இவை களைக் கண்டு மக்கள் கொண்டிடும் எண்ணத்தைப் போக்கிடவும் மாற்றிடவும், வக்கு வழியற்றுப் போன நிலைக்குக் காங்கிரஸ் பிரசார யந்திரம் வந்துவிட்டதைத் தானே காட்டுகிறது கருணாநிதி, மாறன் ஆகியோர் மீது பாதுகாப்புச் சட்டத்தை வீசியிருக்கும் செயல்.

எண்ணிப் பார்த்தாரா, எழுபதாம் ஆண்டுக்கு நடைபோடும் பருவத்தினரான பக்தவத்சலனார்; கருணா நிதியைச் சிறைவைத்திருப்பது பற்றி மக்கள் என்ன பேசிக்கொள்வார்கள் என்பதுபற்றி!

என்ன குற்றம் செய்தான் அந்தப் பிள்ளை?

குற்றமா! இவர்களின் குணத்தை அம்பலப்படுத்தினான். எழுதினான்.

எழுதினால் என்ன? ஆட்சியாளர் குடியா முழுகிவிடும்.

ஆட்சியாளர்களுக்கு அவ்வளவு வெறுப்பு, பயம், கோபம்......

கருணாநிதி எழுதினால் என்ன? அதை மறுத்து இவர்கள் எழுதுவதுதானே! மக்கள் இருசாராரின் எழுத்தையும் பார்த்து, எது நியாயமோ அதனைக் கொள்ளட்டுமே.

எழுதியும் பார்த்தார்கள், காங்கிரசிலே உள்ள எழுத்தாளர்கள்......

மக்கள் சீந்தவில்லை போலிருக்கிறது!!

இப்படியும் இதுபோல வேறுபலவும் பேசிக்கொள் வார்களே! இது ஆட்சியில் உள்ளவர்களின் புகழி னையா வளர்த்துவிடும்!! ஆத்திரம் கண்ணை மறைக்கும் என்பார்கள். அதன் விளைவோ இந்த அடக்குமுறை!!

இவைபற்றி எண்ணிடும்போது, சிறையில் தம்பி அடைக்கப்பட்டிருப்பது குறித்து இயற்கையாக எழும் சோகம்கூட மறைகிறது; கருணாநிதியின் பேச்சுக்கும் எழுத்துக்கும் ஆட்சியாளர் எத்தனை அஞ்சுகிறார்கள் என்ற நினைப்பு எழுகிறது; ஒரு வெற்றிப் புன்னகை தன்னாலே மலருகிறது.

கழகத்தின் வளர்ச்சி கண்டு காங்கிரஸ் அரசு கதிகலங்கிப் போயுள்ளதை எடுத்துக் காட்டி, கழகத் தோழர்களுக்கு மேலும் எழுச்சியைத் தரவல்ல நிகழ்ச்சி, கருணாநிதியைச் சிறைப்படுத்தி இருப்பது என்பது புரியும்போது மகிழ்ச்சிகொள்ளக்கூட முடி கிறது.

கழக வளர்ச்சியை அரசினர் கண்டு கலங்கிடும் வண்ணம் பேச்சாலும் எழுத்தாலும் பணியாற்றியதற் காக கழகம் என்ன விதத்தில் நன்றியைத் தனது கரு ணாநிதிக்குத் தெரிவித்துக்கொள்வது?

ஒன்று இருக்கிறது, கற்கோட்டையில் அடைக்கப் பட்டுள்ள கருணாநிதிக்குக் கழகத் தோழர்கள் காட்டக் கூடிய நன்றியறிவிப்பு! தருமபுரித் தேர்தலில் கழகம் வெற்றி பெறவேண்டும் அந்தச் செய்தி செந்தேனாகி எத்தனை கொடுமை நிறைந்த தனிமைச் சிறையினை யும் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக்கிடும். அந்த வெற்றிச் செய்தி, காடு மாலை வனம்வனாந்திரங் களைக் கடந்து, காவல்கட்டு யாவற்றினையும் மீறி கருணாநிதியின் செவி சென்று மகிழ்ச்சி அளித்திடும். அப்போது முதியவர் முதலமைச்சர் பக்தவத்சலனார் யோசிப்பார், இதுவும் பயன்தரவில்லையே! என்பதாக.

இந்த நோக்கத்துடன் கழகத் தோழர்களும் ஆதர வாளர்களும், தருமபுரி இடைத் தேர்தலில் கழகம் வெற்றிபெற உடனடியாக முனைந்திட வேண்டும்.

கவலையுடன் தம்பி என்னைத் தருமபுரி பற்றிக் கேட்டபோது, நான் மிகுந்த நம்பிக்கையுடன் கூறி விட்டு வந்திருக்கிறேன், தருமபுரியில் கழகம் நிச்சயம் வெற்றிபெறும் என்று.

அந்த வெற்றியைப் பெற்றுத் தருவதைவிட' அடக்கு முறையால் தாக்கப்பட்டு நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு தனிமைச்சிறையில், பாஞ்சாலங்குறிச்சிச் சீமையில், அடைக்கப்பட்டிருக்கும் கருணாநிதிக்குக் கழகம் தரக்கூடிய மகிழ்ச்சிப் பொருள் வேறெதுவும் இருக்க முடியாது.

அடக்கு முறையை வீசி அறப்போர் வீரர்களை அடக்கிவிடவோ, அவர்தம் பாசறையை ஒழித்து விடவோ முடியாது. இதுமிக எளிதாக எவருக்கும் புரிந் திடும் உண்மை என்றாலும், அரசாள்வோர், அதிலும் தமது பிடிதளர்ந்து வருவதை உணர்ந்து பீதிகொண் டுள்ள நிலையிலுள்ள அரசாள்வோர், உண்மையினை மறந்துவிடுகின்றனர்.

சிறைக்கோட்டம் தள்ளப்படும் இலட்சியவாதி களோ, உறுதி பன்மடங்கு கொண்டவர்களாவது மட்டு மல்ல, தன்னைப்பற்றிய எண்ணம், தனது நலனைப் பற்றிய நினைப்பு, தனது குடும்பம்பற்றிய எண்ணம், இவைகளைக்கூட மறந்துவிடவும், தான் தனக்காக அல்ல, மற்றவர்களுக்காகவே, என்ற நெறியினை உணர்ந்து மகிழ்ந்திடவும், தன்னைப்பற்றிய எண்ணம் எழுப்பிவிடும். ஆசை, அச்சம், கவலை, கலக்கம், பிரி வாற்றாமை போன்ற உணர்ச்சிகளை வென்றிடவுமான ஒரு துறவு நிலையைப் பெற்றளிக்கிறது, இது பற்றியே ஆன்றோர், சிறைச்சாலையை அறச்சாலை என்றனர்.

பாளையங்கோட்டைச் சிறைவாயிலில், கண்டேன், இந்தப் பேருண்மையை உணர்த்தும் எழுத்தாரத்தை அங்கு பொறிக்கப்பட்டிருப்பது என்ன?

''தன்னை வெல்வான்
தரணியை வெல்வான்!''

அண்ணன்,

அண்ணாதுரை

கைதி எண் 6342



தம்பி!

பூஜா மாடத்துப் படங்களை அருகே சென்று பார்த்தான் வாலிபன். திடுக்கிட்டுப்போய், கிழவியைக் கூப்பிட்டு, ஏசுவின் படத்துக்குப் பக்கத்தில் இருந்த ஒரு படத்தைச் சுட்டிக்காட்டி "இது என்ன?" என்று கேட்கிருன். இவரும் ஒரு அருளாளர்தான் என்கிருள் கிழவி. "பெயர்?" — "தெரியாது" "எப்படிக் கிடைத்தது? யார் கொடுத்தது?" — "யாரும் கொடுக்கவில்லை — ஊரில் எங்கோ ஓரிடத்தில் இது விழுந்துகிடந்தது, பார்த்தேன்." — "பார்த்து?" "இவர் ஒரு அருளாளர் என்று உணர்ந்தேன், எடுத்துவந்தேன்.;' — "இவர் அருளாளர் என்று யார் சொன்னுர்கள் உனக்கு ?— "ஒருவரும் சொல்லவில்லை; எனக்கே தோன்றிற்று, முகத்தைப் பார்த்ததும். மற்ற அடியார்களை விட இவர் மேலானவர் என்று தோன்றிற்று, அதனுல்தான், முன்பு ஏசுவுக்குப் பக்கத்தில் இருந்த அடியார் படத்தை சற்றுத் தள்ளி மாட்டிவிட்டு, இவர் படத்தை ஏசுவுக்குப் பக்கத்திலே மாட்டி பூஜை செய்தேன்."

வாலிபன் புன்னகை புரிந்தான் — இந்த முறை ஏளனமாக அல்ல — பெருமிதத்துடன், ஏனெனில் கிழவி கண்டுகொண்டுவந்து பூஜா மாடத்தில் வைத்து, இவர் ஏசுவுக்குப் பக்கத்தில் இருக்கவேண்டிய அருளாளர் என்று கருதி பூஜைநடத்தி வந்தது, — எந்தப் படத்துக்கு என்ருல், காரல்மார்க்ஸின் படம்!

"இந்த அருளாளரின் போதனையின்படி நடந்தால், ஏழை எளியவர்கள் புது வாழ்வு பெறுவார்கள்" என்று கூறினுன் களிப்புடன்.

மழை நின்றது.........

ஒருநாள் கிழவி, வெளியே சென்று அலைந்துவிட்டு அலுத்துப்போய் வீடு திரும்பினுள். வீட்டு எதிரே சாமான்கள் நிரம்பிய பாரவண்டி நிற்கிறது, வீட்டின் கூரைப் புறத்தில் இரண்டு ஆட்கள் உட்கார்ந்துகொண்டு, பலகைகளைப் பழுது பார்ப்பதும், கெட்டுப்போனவைகளை அப்புறப்படுத்திவிட்டு, புதிய பலகைகள் அமைப்பதுமாக இருக்கிருர்கள். விவரம் புரியாமல் முதலில் காகூவெனக் கூச்சலிடுகிருர்கள். "கிழவி! ஏன் கூச்சல் போடுகிருய். உன் வீடு மெத்தக் கலனுகிவிட்டிருக்கிறது. அது விழுந்து விடாதபடி, பழுது பார்த்துக் கொடுக்கிருேம், உன்னுடைய வீட்டை யாரும் தூக்கிக்கொண்டு போய்விடமாட்டார்கள்; பதருதே" என்று கூறினுர்கள்.

"என் வீடு விழாதபடி செய்கிறீர்களா! புதுசாக்குகிறீர்களா! நல்லவர்களப்பா நீங்கள், ஆமாம், யாருடைய உத்திரவு இதற்கு — இந்த ஏழையின் கஷ்டத்தைத் தெரிந்து இந்த உதவியைச் செய்யச் சொன்ன உத்தமன் யார், அருளாளர் யார், அடியார் யார்?" என்று நெஞ்சு நெகிழக் கேட்கிருள் கிழவி. வீடு பழுது பார்ப்பவர்கள், "நாங்கள் மாவட்ட பொது உடைமைக் காரியாலய உத்திரவு பெற்று, இதனைச் செய்கிருேம்" என்ருர்கள். கிழவிக்குப் புரியவில்லை.

வீடு செப்பனிடப்பட்டாகிவிட்டது. குளிர் தெரிய ஒட்டாதபடி ஆக்கப்பட்டுவிட்டது. உள்ளே செல்கிருள் கிழவி; உட்காருகிருள், நிம்மதி பெறுகிருள்; என் பூஜை பலித்தது, என் பிரார்த்தனைக்குப் பலன் கிடைத்தது; என்று கூறி தொழுகை நடத்துகிருள் — குறிப்பாக, பெயர் தெரியாத புதிய அருளாளருக்கு.

காரல்மார்க்ஸின் படம் கர்த்தரின் படத்துடன் ஒரே வரிசையில் பூஜா மாடத்தில் இருக்கிறது.

அருள்பாலித்தவர் என்று நெஞ்சு நெக்குருகத் தொழுகிருள் கிழவி — அவள் அறியமாட்டாள் பூஜா மாடங்கள் பணக்காரர் தமது ஆதிக்கத்துக்காக ஏற்படுத்திவைத்த கபடக் குகைகள் என்று போதித்த காரல்மார்க்ஸின் திருஉருவப்படம், அது, என்பதை.

மற்ருேர் கதை, கைதியின் கதை.

ஒரு இரும்புப் பட்டறைத் தொழிலாளி. அவன் தகப்பனும், அண்ணன் தம்பிகளும் அதே பட்டறையில் வேலை செய்பவர்கள். தொழிற்சாலை முதலாளியுடையது. தொழிலாளர்களின் உரிமைக்காகக் கிளர்ச்சி செய்தான் என்பதற்காக அந்தத் தொழிலாளியைச் சிறையிலே போட்டு அடைத்தார்கள். காலிலே, ஒரு விலங்கு, ஒரு இரும்புச் சங்கிலி. கதை, இந்த விலங்கைப்பற்றித்தான் — விலங்குவிடு தூது! என்ற கருத்துப்பட, கதைக்குத் தலைப்பிட்டிருக்கிருர்கள்.

இந்தக் கால் விலங்கை, மற்ருேர் கைதி பார்க்கிருன், உற்றுப் பார்க்கிருன், தொட்டுப் பார்க்கிருன், மகிழ்ச்சியுடன் பார்க்கிருன், பார்த்துவிட்டு, "அதே தான்! அதே விலங்குதான்! அதிர்ஷ்டவிலங்கு!" என்று கூறுகிருன். விலங்குகளிலே, அதிர்ஷ்டமானது, அதிர்ஷ்டக்கட்டை என்று என்ன இருக்கிறது என்று புரியவில்லை, தொழிலாளிக்கு, விவரம் கேட்கிருன்.

"இதே விலங்குதான் முன்பு ஒரு முறை எனக்குப் பூட்டினுர்கள்! கழற்றிவிட்டு ஓடித் தப்பித்துக்கொண

டேன், அதற்கு முன்பு ஒருமுறை இதே விலங்கை வேறு ஒருவனுக்குப் பூட்டியிருந்தார்கள். அவனும் இதைக் கழற்றிப் போட்டுவிட்டு ஓடிவிட்டான்; இது கைதிகளைத் தப்பி ஓடிவிடச் செய்யும் விலங்கு; அதிர்ஷ்ட விலங்கு'' என்று கூறினான்,

தன் சிறை வாழ்க்கைபற்றி, தகப்பனுக்கு எழுதிய கடிதத்தில், மகன், இந்த விலங்குபற்றி குறிப்பிட்டிருந்தான்—சிறை அதிகாரிகள் கண்ணில் படலாமா இப்படிப்பட்ட கடிதம், ஆகவே கடிதத்தை அனுப்ப வேண்டிய முறைப்படிதான், இரகசியமாக அனுப்பி வைத்தான். மகன் சிறையில் இருந்து எழுதிய கடிதத்தைப் படித்த தகப்பனுக்கு அந்த விலங்கு மீது ஒரு விருப்பம் ஏற்பட்டது. எப்படியாவது அந்த இரும்புச் சங்கிலியையும் விலங்கைதயும், தனக்கு அனுப்பிவைக்குபடிக் கடிதம் எழுதினான். மகன், தந்திரமாக, அந்த விலங்கைத் தகப்பனாருக்கு அனுப்பிவைத்தான். அது கிடைத்ததும், தொடுவதும், குலுக்கி கிளம்பும் ஓசையைக் கேட்பதும், மனைவியிடமும் கற்ற மகன்களிடமும் காட்டுவதும்—தகப்பனுடை பெருமை நிறைந்த வேலையாகிவிட்டது.

“தொழிலாளிகள் உரிமைபெற்று வாழவேண்டும் என்பதற்காகப் பாடுபட்ட என் மகன் காலிலே, இருந்த விலங்கு இது, பார் இது பாடுவதை; பாடலின் பொருள் புரிகிறதா!'' — என்று பேசியபடி விலங்கை நண்பர்களிடம் காட்டுவான்.

தொழிற்சாலையிலே ஒரு விழா வந்தது. அந்த விழா நாளன்று ஆடல் பாடல். அந்த விழாவிலே, விலங்கு கொண்டுவரப்பட்டது, அதைஒருவர் அணிந்து கொண்டு நடப்பது. அதிலே கிளம்பும் ஓசையைக் கேட்டு மகிழ்வது; விலங்கைக் கையிலே எடுத்துக் கொண்டு குலுக்குவது, அதனால் கிளம்பும் ஓசையை இசையாகக் கொண்டு நடனமாடுவது, இப்படி நடந்தது என் மகன் காலில் இருந்த விலங்கு — என்று கூறிக் கெள்வதிலே அந்தத் தகப்பனுக்கு ஒரு தனிப் பெருமை தனி மகிழ்ச்சி.

தொழிற்சாலை முதலாளிக்கு விஷயம் எட்டிற்று, வெகுண்டெழுந்தான் — “எங்கே விலங்கு? யாரிடம் இருக்கிறது? எப்படிக் கிடைத்தது? என்று கேள்விகளை அடுக்கினான். அவன் தேடிட ஆட்களை ஏவினான், விலங்கோ, ஒருகையிலிருந்து மற்றோர்கை, பிறகு இன்னொருவர் கை என்று மாறிமாறி மறைந்தேவிட்டது — பாதுகாப்பான இடத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது — முதலாளியால் கண்டு பிடிக்க முடியவில்லை.

புரட்சி வந்தது, புது ஆட்சி எழுந்தது, முதலாளி தத்துவம் முறிந்தது, தொழிற்சாலைகள் பொதுஉடைமையாயின.

கைதியாகச் சென்ற மகன், இதற்கிடையில், சிறையினிலும் தப்பிச் சென்றான்; புரட்சியில் பங்கு கொண்டான் என்று கேள்விப்படுகிறான் தகப்பன்; மேலும் பெருமைப்படுகிறான்.

பொதுஉடைமை ஆட்சி எற்பட்டுவிட்டது, இனி விலங்குக்கு விடுதலை — இதைக் கண்டுபிடிக்க மோப்பமிடும முதலாளி இனி இல்லை — விலங்கு இனித் தலை மறைவாக இருக்கத் தேவை இல்லை — என்று கூறி, தன் வீட்டுக் கூடத்தில், அந்த விலங்கைத் தொங்க விட்டிருந்தான், காட்சிப் பொருளாக. தொழிலாளர்களும் பொதுமக்களும் அணி அணியாக அவன் வீடு வந்தனர், விலங்கைக் காண, அதனுடன் இணைந்திருந்த வரலாறு கேட்க, பாட்டாளியின் கதை அறிய ‘என் மகன் காலில் இருந்தது! பாட்டாளிகளுக்காகப் பாடுபட்ட என் மகன் காலில் இதைப் பூட்டி வைத்தார்கள் — என் மகன் இதனால் நசுங்கியா போய்விட்டான் — முதலாளித்தனம்தான் பொசுங்கிப் போய் விட்டது — இதோ, விலங்கு கொலு இருக்கிறது — தளைகள் பூட்டப்பட்டிருந்தவர்கள் தரணி ஆள்கிறார்கள் — இதோ கேளுங்கள் விலங்கின் பாடலை என்று கூறி, கையிலே எடுத்து வைத்துக்கொண்டு குலுக்குவான் — அந்த ஓசை இசையாக இருந்தது கேட்பவர்களுக்கு.

எதிர்ப்புரட்சியை அடக்கும் போரில் ஈடுபட்டு மகன் மடிந்துவிட்டான் என்று தகப்பன் கேள்விப்படுகிறான், வேதனை அடைகிறான்.

தொழில்கள் பொதுஉடைமையான உடன், வேலை நேரம் குறையும் கூலி வசதி பெருகும் என்று எதிர்பார்த்த தெழிலாளருக்கு, மேலும் உழைக்கவேண்டிய நிலையும், கடினமான சூழ்நிலையும், கூலி உயராத் தன்மையும் ஏற்பட்டது; ஏற்படவே கோபம் கொந்தளிப்பு. என்னய்யா மணலைக் கயிறுஆகத் திரிப்போம் என்று வாய்வீச்சாக நடக்கிறார்கள், நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கிறதே; பொது உடைமை வந்து கண்ட பலன் இதுதானா? முன்பு வேலை செய்ததைவிட அதிகமாகவேலைசெய்ய வேண்டுமாமே! ஏன்? கூடாது! ஆகாது! — என்றெல்லாம் தொழிலாளிகள் முழக்கம் எழுப்புகிறார்கள், இரும்புப் பட்டறையில். குழப்பமான நிலைமை. பொதுஉடைமை ஆட்சியினர் இதை எப்படிச் சமாளிப்பது, தொழிலாளிகளுக்கு என்ன விளக்கம் அளிப்பது, சமாதானம் கூறுவது என்று குழம்பிக் கொண்டிருந்தனர்.

இரும்புப் பட்டறையில் மூண்டுவிட்ட கலவரம் பற்றிக் கேள்விப்பட்டதும், அந்த முதியவன் வீட்டுக் கூடத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்த விலங்கை எடுத்துககொண்டான், நேராக தொழிற்சாலை சென்றான். கூவிக்கொண்டும், குழம்பிக் கொண்டும் கிடந்த தொழிலாளர்களை நோக்கினான் — ஒரு மேடை மீது ஏறினான், விலங்கை எடுததுக் குலுக்கினான் — ஓசை கிளம்பிற்று, கூச்சல் அடங்கிற்று, மேலும் குலுக்கினான்; அனைவரும் அந்த ஓசை இசையைக் கேட்டிடலயினர்.

GIRIJA'S Coffee

கிரிஜா காப்பித்தூள்

குணம், மணம், ருசி, இவற்றில் சிறந்தது

100 சுயம்

கிடைக்குமிடம்: போன்: 75833

கிரிஜா காபி ஒர்க்ஸ்,
காபி வெண்ணெய், நெய்
வியாபாரம்,
5/76 ராயப்பேட்டை ஹைரோடு
மைலாப்பூர், சென்னை-4.

"என் மகன் காலில் இருந்த இரும்புச் சங்கிலி — விலங்கு — கேளுங்கள் இதன் இசையை — இதைப் பூட்டினார்கள் என் மகன் காலில்—எத்தனையோ பேர்களுடைய காலில் — எழை எளியோருக்குப் பாட்டாளிக்கு, முன்பு இருந்த அரசு பூட்டியது விலங்கு! கவனம் இருக்கட்டும்! விலங்கு—நமக்கு! பூட்டியவர்கள் அவர்கள்; இன்று அவர்களை அகற்றிவிட்டோம், நமது அரசு அமைத்திருக்கிறோம். நமது அரசு ஆரம்பமாகி இருக்கிறது. இந்த அரசு முறையிலே குறை இருக்கலாம் — நீக்கிக் கொள்ளலாம் ஆனால் அந்தக் குறை காரணமாகக் குழப்பமிடுவது, கலாம்விளைவிப்பது, ஆட்சியை எதிர்ப்பது என்று பாட்டாளிகள் கிளம்பினால், என்ன நடக்கும் — நமது அரசு விழும் — பழைய அரசு எழும். பழைய அரசு வந்தால் என்ன கிடைக்கும் இதோ இது! விலங்கு! இரும்புச் சங்கிலி! காலில் விலங்கு! என் மகன் காலில் பூட்டியது போல. புரிகிறதா! கேளுங்கள் விலங்கின் — இசையை கேளுங்கள் —"

இந்தப் பேச்சும், விலங்கு கிளப்பிய ஓசை இசையும், தொழிலாளிகளை, ஒரு முடிவுக்கு வரச்செய்தது.

விலங்கின் இசை புரிகிறது — வேலைக்குச் செல்வோம்—நமது அரசு நிலைத்திடவேண்டும், அதற்காக நாம் கஷ்ட நஷ்டம் ஏற்போம்—விலங்கின்—இசையின் பொருள் அதுதான் என்று எண்ணினர், அமைதியாக வேலைக்குச் சென்றனர்.

2—6—64

இன்று காலை ஆறுமணிக்கு அன்பழகன் விடுதலையானார். அவருடன் குழுவினரும் விடுதலை பெறுகின்றனர். இத்தனை நாட்களாக மெத்தவும் எனக்கு உதவியாக இருந்துவந்த அன்பழகன் விடைபெற்றுச் சென்றபோது, இருவருமே ஒருகணம் கவலைகொண்டோம்; பிறகோ இரண்டு வாரத்திற்குள் நானும் விடுதலைபெறப் போகும் நினைவைத் தருவித்துக்கொண்டோம்.

அன்பழகன் குடும்பமே கழகத்துக்குச் சிதம்பரத்தில் ஆண்டுபலவற்றுக்கு முன்பிருந்தே அணிகலனாய்த் திகழ்ந்து வருவது. அவருடைய தகப்பனார் என்னைத் தருவித்துச் சிதம்பரத்தில் கூட்டம் நடத்தும் அந்த நாட்களில், ஒல்லியான இந்த உருவம்-அன்பழகன்-ஓடி ஆடி வேலை செய்யக்கண்டேன். ஆண்டு சில சென்ற பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயிலக் கண்டேன். அப்போதே, ஆர்வம் அஞ்சாநெஞ்சு, உள்ளொன்று புறமொன்று கொள்ளாப் பண்பு எல்லாம் உண்டு. கழகத் தொண்டு அப்போதே அவருக்குக் கற்கண்டு. இருப்பைக் கரைத்து இன்ப வாழ்வு நடாத்தும் குடும்பமல்ல—எளிய வாழ்க்கை-என்றாலும் எவரிடமும் இச்சகம் பேசிடவோ நச்சரித்து வாழ்ந்திடவோ முனைந்ததில்லை. எல்லாப் பிள்ளைகளும் கற்றறிவாளரானார்-மூவர் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார்-அன்பழகன், பச்சையப்பன் கல்லூரியில்-அறிவழகன், வண்ணை தியாகராயர் கல்லூரியில்-திருமாறன் விருதுநகர் கல்லூரியில். கல்லூரியில் அன்பழகன் கழகக் கொள்கைகளைக் கலந்து தமிழ்த்தேன் குழைத்துத் தந்துவந்தார், அதனால் கிடைத்த தோழர் பலர் நமக்கு. முழுநேரம் கழகத்துக்காக்கிடுவேன் என்று என்னிடம் கூறியபோதெல்லாம், தமிழ்ப் பேராசிரியர் எனும் தகுதி நிலை இழத்தல் கூடாது என்றுகூறித் தடுத்துவந்தேன்-பிறகு இசைவளித்தேன்-இன்று அவர் மேல் சபையில் உறுப்பினர், எனக்கு உற்ற நண்பர்.

நான் ஓய்வு விரும்பும்போது சென்னையில் எனக்கு இல்லம் அவர் இல்லம். கனிவு இருக்கும், குழைவு இருக்காது—தெளிவு இருக்கும் பேச்சில், நெளிவு எழாது. எத்தனையோ தோழர்கள் இதனை எடுத்து எப்படிக் கூறுவது என்று எண்ணி இருப்பதுண்டு-இருவர் என்னிடம் தமது மனதில்பட்டதை மெருகும் ஏற்றாமல் எடுத்துரைப்பர் — இவர் அதில் ஒருவர் — மற்றொருவர் காஞ்சி. கலியாணசுந்தரம்.

சிறையிலே சிந்தைக்கு மகிழ்வும் தெளிவும் உண்டாகும் விதமாக எத்தனையோ பேசினோம். குறளின் பொருளதனைச் சுவைமிஞ்சக் கூறிவந்தார். ஏடு முடித்திட இயலவில்லை, வெளியே சென்று தொடர்ந்து எழுதி முடித்துத் தருவேன் என்றுரைத்துச் சென்றார்.

உடல் நலிவு எனக்கு, அதில் ஏதும் மாற்றமில்லை-உணவுவகை மாற்றமே உற்ற மருந்தென மருத்துவர் உரைத்துச் சென்றார். இரவெல்லாம் கண்விழிப்பு—பகலெல்லாம் வலிபொறுத்தல்-இந்தநிலை நாலைந்துநாளாய். இன்று மருத்துவமனை சென்று வரவேண்டுமென நண்பர்கள் கூறினர்-நானும் அது தேவை என உணர்ந்தேன்-ஆனால் இங்குள்ள மருத்துவர் இப்போதைக்குத் தேவை இல்லை, நோய் கடினமானால் பார்த்துக்கொள்ளலாம் என்ற போக்கில் பேசிச் சென்றுவிட்டார்; பதில் பேசாதிருக்கின்றோம். வலிமுற்றி அதன் வகை முற்றிடும் முன்பு, தக்கமுறையினில் மருந்து உட்கொள்வதுதான், மருத்துவம் கூறும் முறை. ஆனால் கைதிகளுக்குக் காட்டுவது வேறுமுறை; உணர்கின்றேன்.

இன்று மாலை அக்காவும் அண்ணாவும் அடிகளும் இளங்கோவனுடன் என்னைக் காணவந்தனர். ஊரில் உள்ளோர் நலன்பற்றிக் கூறினர்கள்.

புகுமுக வகுப்புத்தேர்வில் கௌதமன், ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் வெற்றிபெறவில்லை என்று சேதி கிடைத்தது.

விற்பனையாளர்களுக்கு

மணியாடர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

உரிமையாளர்
"காஞ்சி"
சின்ன காஞ்சிபுரம்.

இன்று இதழ்கள் எங்களுக்கு மாலை ஐந்துமணிக் குத்தான் கிடைத்தன. லால்பகதூர் சாஸ்திரி ஒருமன தாகப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்ற செய்தி கண்டோம்.

தொடர்ந்து படித்திட இயலவில்லை — சிலநேரம் படிப்பது சிலநேரம் பேசுவது, எந்நேரமும் வலிபொறுத் துக்கொண்டிருக்கும் பயிற்சி — இது போல் இருக் கின்றேன்.

நாளையத்தினம் விடுதலையாகும் நண்பர்களை இன்று மாலை தொலைவிலிருந்து கண்டேன், தோழமை வணக்கம் செய்தேன்.

அமெரிக்க நூலாசிரியர், அரிய பல ஏடுகளை ஆக் கித்தந்தவர் அப்டன்சிங்களர் என்பார், பல்வேறு நாடு களில், பல பேரறிவாளர், நீதிக்காகப் பரிந்துரைத் தவைகளைத் தொகுப்பு நூலாக்கித் தந்துள்ளார். இப் போது அதனைத்தான் படித்துப் பயன்கண்டு வருகின்றேன்.

இன்று மாலை, முன்பு திராவிடநாடு அச்சக அலு வல் பார்த்து இப்போது துரை அச்சக உரிமையாள ராகியுள்ள தோழர் சம்பந்தம், மீண்டும் இதழ் நடத்த வேண்டுமெனக் கூறினர்.

என்னாலே இதழ் நடத்தும் பொறுப்புகளை நிறை வேற்ற இயலாது, எழுதித்தரலாம்; இளங்கோவன் இதழ்நடத்த இருக்கின்றான் என்று கூறினேன். இதழ் நின்றுவிட்டது எனக்குமட்டும் இனிப்பளிக்குமா? இல்லை. என்ன செய்வது? பொறுப்புகளைக் குறைத்துக் கொண்டாகவேண்டி ஏற்பட்டுவிட்டது.

நேற்றிரவு மழை-இலேசாக. இன்று குளிர்காற்று, வெளியே மிகுதியாக, உள்ளேயோ தொடுவதும் படு வதுமாக.

இப்போது நான் தங்கி இருப்பது முதல் எண் உள்ள அறை—அன்பழகன் இருந்த இடம். நான் மூன் றும் எண்ணுள்ள அறையில் இருந்தபோதும், இந்த அறையினில் அதிகநேரம் கழித்திருக்கிறேன், இப் போது இங்கேயே குடியேறி இருக்கிறேன்.

காலையில், வழக்கமான பார்வையிடல்—வரிசை யாக நின்றோம்.

3—6—64

இன்று மாலை துரை அச்சகம் சம்பந்தத்தை சிறை அதிகாரி அழைத்துவரச் சொன்னார். சம்பந்தம் சமையலறை பொறுப்பில்இருப்பதால் அதுபற்றி ஏதோ கூற அழைத்தனர் என்று எண்ணிக் கொண்டோம். சில நிமிடங்களில் சம்பந்தம் பயமும் துக்கமும் கப்பிய முகத்துடன் திரும்பிவந்து 'ஒரு வாரம் பரோல் எடுத் திருக்கிறோம் உடனே புறப்படு' என்று சொல்கிறார்கள் அரங்கண்ணலும் சிட்டிபாபுவும், என்ன காரணம் என்று கூற மறுக்கிறார்கள் என்று சொன்னார். அனைவ ருக்கும் திகிலாகி விட்டது; வீட்டில் ஏதோ விபத்து என்று உணர்ந்தோம். விவரமோ தெரியவில்லை. வேத னையை அடக்கிக்கொண்டு சம்பந்தம் விடைபெற்றுச் சென்றார். சிறிது நேரத்திற்குப் பிறகு மணியைக் காண காஞ்சிபுரம் தோழர்கள் வந்திருந்தனர். அவர்கள் மூல மாகச் சேதி தெரிந்தது. சம்பந்தத்தின் மகன் ஏழு வய துச் சிறுவன் அம்மை நோய் கண்டு இறந்துவிட்டிருக் கிறான்—முந்தின தினம்; மாலை அடக்கம் செய்துவிட்ட னராம். பிறகே, சம்பந்தம் பரோலில் செல்ல அனுமதி கிடைத்திருக்கிறது. உடலைக் கூடக் காணமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. எப்படி வேதனைப்படுகிறாரோ, என்னென்ன கூறிக் கதறுகிறாரோ, மகனைப் பறி கொடுத்த தாய் எத்தனை பதறுகிறார்களோ என்றெல் லாம் எண்ணி ஏங்கினபடி இருந்தோம். இழப்புகள், இன்னல்கள், இடர்ப்பாடுகள் பல பொறுத்துக்கொண்டு இன்தமிழ் வாழ, வளர தமது தொண்டினை நல்கும் ஆர்வம், பலரைச் சிறையிலே கொண்டுவந்து சேர்த் திருக்கிறது.

இன்று பிற்பகல்தான், சம்பந்தம் சொன்னார், "அண்ணா உங்களோடு சேர்ந்து சிறையினிலே இருப்ப தாலே, தொல்லைகள் மிகுதியாக இல்லை" என்று. வேடிக்கையாக நான் சொன்னேன், 'என்னோடு சேர்ந் ததனால்தானே அப்பா, சிறை வர நேரிட்டது உங்களுக் கெல்லாம். உங்கள் வீட்டாரும் வேறு பல இல்லங்களி லும் இவனுடன் கூடிக்கொண்டு, என் மகன் சிறை சென்றுவிட்டான் என்று என்னை ஏசிக்கொண்டிருக் கிறார்களோ என்னமோ' என்றுசொன்னேன். சம்பந்தம் போன்ற உழைத்துப் பிழைத்துவரும் தோழர்கள் உயர் பதவி கிடைக்குமென்றோ, ஊர் மெச்சுமென்றோ, வருவாய் பெறத்தக்க வழி கிடைக்குமென்றோ எண்ணி அதற்காகச் சிறை வந்தவர்களல்ல — நமது கழகத் தொடர்பு கொண்டுள்ளவர்கள் அதன் காரணமாக இத்தகைய வாய்ப்புகளைப் பெறவும் இயலாது; இது நாடறிந்த உண்மை; இருப்பதை இழந்தவர்கள் பலரும் உண்டு. இது நன்கு தெரிந்திருந்தும், அச்சகத் தொழி லாளி சம்பந்தம் அறப்போரில் ஈடுபடத் தாமாக, நான் தடுத்தும் கேளாமல், ஈடுபட்ட காரணம், அவர் நெஞ் சத்தில் இடம் பெற்றுள்ள தமிழார்வம், உரிமை உணர்ச்சியன்றி வேறெதுவாக இருக்கமுடியும்? அத் தகைய நல்லார்வம் பெற்றுள்ள தோழருக்கு நேரிட்டு விட்ட இழப்பினை எண்ணி எண்ணிப் பெரிதும் வாட்ட முற்றுக் கிடந்தோம்.

அண்ணன்,

அண்ணாதுரை.

கேள்வி-பதில்

(1) வன்முறைச் செயலைக் கழகம் கண்டிக்கிறது என்பதாலேயே கழகம் வன்முறையைத் தூண்டிவிட வில்லை என்று வாதாடுகிறீர். வன்முறையைக் கண்டிக்காதவர் யார்?

எனக்குத் தெரிந்த வரையில் தமிழகத்தில் தலைவிரித்தாடிய வன்முறை, அடக்குமுறை; இவைகளைக்கண்டித்து விளக்கமாகப் பேசவோ, விரிவான அறிக்கை விடவோ மாநாடுநடத்தவோ முன் வராதவர் ஒருவர் தான் இருக்கிறார். காரணம் தெரியவில்லை. ஆனால் அவர் யார் என்பது தெரிகிறது. அகிலஇந்தியக் காங்கிரஸ் தலைவர் காமராஜர். ஒரு சமயம் அகில இந்தியாவிலுமாகச் சேர்த்து வன்முறைக்கிளர்ச்சி நடந்தால்தான், கண்டன அறிகை வெளியிடுவார் போலிருக்கிறது.

(2) எதிர்க்கட்சியினர் எண்ணிக்கையின் கணக்குதான் வெட்ட வெளிச்சமாகத் தெரியுமே! நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தோற்றுத்தானே போகும். அப்படியிருந்தும் ஏன் நம்பிக்கை இல்லாத் தீர்மானம்? ஏமாளித்தனம் அல்லவா?

கணக்கு எங்களுக்குப் புரியும் என்பது போல காங்கிரஸ் கட்சிக்கும் புரியுமே — அவர்கள் தானே மெஜாரடி, அப்படி இருக்கும் போது ஏன் ஒவ்வொரு தடவையும் 'ஒட்டு' எடுக்கிறார்கள். விவரம் அறியாதவர்களா?

(3) பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்கிறீர்களே. உங்கள் சுதந்திரக் கட்சி ராஜாஜி எதிர்க்கிறாரே, தெரியுமா?

ஓ! தெரியுமே!! ஆனால் அதென்ன, உங்கள் சுதந்திரக் கட்சி என்று கூறுகிறீர். ஓஹோ! நகைச் சுவையாக! பலே! பலே! ஆனல், ஐயனே! ஒன்று தெரியுமா உமக்கு; 1963ல் கழகத் தோழர் மதியழகன் சென்னை சட்டசபையில் 14 மொழிகளும் இந்தியப் பேரரசில் ஆட்சி மொழிகளாக வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்த போது, சட்டசபையில் உள்ள சுதந்திரக் கட்சித் தலைவர் சா. கணேசன், அதனை ஆதரித்திருக்கிறார். உங்கள் கணேசனாக இருந்தவர் தான்!!

(4) மத்திய சர்க்கார் முன் வரா விட்டால் கூட, நாங்களே சேலம் இரும்பாலையைத் துவக்கப் போகிறோம் என்று மந்திரி வெங்கடராமன் பேசியிருக்கிறார், தெரியுமா!

தட்டுமுட்டு விற்றாகிலும் கெட்டி மேளம் வைப்பேன் என்றானும், நடையாய் நடை நடந்து எஜமானனிடம் பணம் வாங்க முடியாதவன்.

(5) அவனவன் வான வெளியிலே பறக்கிறான், நீங்கள் மொழிச் சண்டை போடுகிறீர்கள்!

அது தப்புத்தானய்யா, தப்பு, தப்பு. 'வான வெளியிலே அவனவன் பறக்கிற போது வர்ணத் தண்ணீரையாவது வாரிஇறைத்துக் கொள்ள வேண்டாமா, ஹோலி பண்டிகையின் பேரால்! மேலே இருந்து பார்த்தவன், மெடல் கூடப் போடுவான், கலர்த் தண்ணீர் ஐயாக்களுக்கு!!

(6) இப்போது நடக்கும் மொழிப் போராட்டம் தமிழுக்காக அல்ல, என்கிறாரே ஒருவர்?

என்னய்யா! இவ்வளவு சாதாரணமாகச் சொல்லிவிட்டீர். ஒரு தலைவர் என்றுசொல்லும். தமிழுக்காகத்தனியாக ஒரு போரட்டம் நடத்துவார், இப்போது வேறு போராட்டம் நடப்பதால் தமது 'ரத கஜதுரக பதாதிகளை' கஷ்டப்பட்டு அடக்கிவைத்துக்கொண்டிருக்கிறார். பிறகு ஒரு நாள் போடப் போகிறார் பாருங்களேன். மளார்! படார்! சட சட! என்ற சத்தம் கிளம்பி சந்திர மண்டலத்தைத் தட்டி எழுப்பப் போகிறது. அதுவரையில், மற்றவர்கள் செய்கிற காரியத்தைக் குறை கூறிக்கொண்டிருக்கட்டுமே. பொழுது போகவேண்டுமே!!

(7) பண்டாரநாயகா அம்மையின் கட்சி தோற்றுவிட்டதே...!

ஆமாம்! ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளாகும்.

(8) அமைச்சர் சுப்ரமணியம் உணவுப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண மும்முரமாக ஈடுபட்டிருக்கிறாராமே!

உணவுப் பிரச்சினைக்குப்பரிகாரம் காணமட்டும் அல்ல உணர்வுப் பிரச்சினைக்கும் பரிகாரம் தேடியபடி இருக்கிறார்.

(9) சர்க்கார் இன்னின்னதுசெய்ய வேண்டும் என்பது நீங்கள்தான் சொல்லவேண்டுமா? காங்கிரஸ் காரர்களே கூறுகிறார்கள், தெரியுமா?

ஓ! தெரியும்! பூனரம் பூண்ட புதுமைக் கதை தெரியுமா உமக்கு. கேட்டுப்பாரும், சுவையாகவும்இருக்கும். காங்கிரஸ் சர்க்காரின் நிலைமைக்குக் கதை பொறுத்தமாகவும் இருக்கும்.

(10) தி. மு. கழகத்துக்கும் வன்முறைக்கும் சம்பந்தமில்லை என்று நீங்கள் பன்னிப் பன்னிச் சொல்லியும் முதலமைச்சர் பக்தவத்சலனார், பிடிவாதமாக தி. மு. க. மீதே குற்றம் சாட்டுகிறாரே!

என்ன செய்யலாம்! அவர் படித்த ஆத்திச்சூடி, 'அடம் செய விரும்பு' என்று இருந்திருக்கும் போலிருக்கிறது.

இது என்ன விந்தை!

இந்தியப் பேரரசில் கல்வியமைச்சராக உள்ளவர் திரு. சக்ளா. புகழ்மிக்க வழக்கறிஞர் பின்னர் மதிப்புமிக்க நீதிபதியாகப் பணியாற்றியவர்—லீகை எதிர்த்து நின்ற முஸ்லீம். இவர் எகிப்துக்குச் சென்றிருந்தபோது அரபுக் குடிஅரசுத் தலைவர் நாசர் அவர்களைக் கண்டு பேச விரும்பினார். ஆனால் அதற்கு நேரம் கிடைக்கவில்லை என்று நாசர் கூறிவிட்டார் என்று தெரிகிறது.

இப்போது எகிப்து சென்றுள்ள முன்னாள் முதலமைச்சர் ஷேக்அப்துல்லா, நாசருடன் இரண்டுமணி நேரம் பேசினார் என்று கூறப்படுகிறது.

நாசருக்கு இந்தியாவிடம் மிகுந்த நட்பு — அதற்குக் காரணம் எங்கள் ஆட்சி பற்றியும் அதனை நடத்தும் காங்கிரஸ் தலைவர்கள் குறித்தும் நாசருக்கு உள்ள மதிப்பு என்று பூரிப்புடன் பேசுகின்றனர் காங்கிரஸ் தலைவர்கள்.

ஆனால் நாசரோ, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அமைச்சர் சக்ளாவைப் பார்க்கத் தமக்கு நேரம் இல்லை என்கிறார்! ஷேக் அப்துல்லாவிடமோ இரண்டு மணி நேரம் பேசுகிறார்!! இது என்ன விந்தை!

✻

பேரரசு சுமக்கும் கடன்

இந்த ஆண்டு இறுதியில் (1965-66) இந்தியப் பேரரசு பல்வேறு வகைகளில் வாங்கியிருக்கும் கடன் தொகை 7842-கோடி ரூபாயாகிவிடும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

✻

ஊற்று நீர்

பூமிக்கடியில் கிடைக்கக் கூடிய ஊற்றுநீர் வளம்பற்றி, திட்டக் கமிட்டி உறுப்பினர் பேராசிரியர் தாக்கர், உற்சாகம் தெரிவித்திருக்கிறார்.

சென்னை நகருக்கு அருகில், கிடைக்கக் கூடிய ஒரு 'ஊற்று' குறித்து ஐக்கியநாடுகள் மன்ற ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளதை தாக்கர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த 'ஊற்று' மூலம் நாளொன்றுக்கு 200-இலட்சம் காலன் அளவு தண்ணீர், இருபது முப்பது ஆண்டுகள் வரையில் கிடைக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தக் காலத்திற்குள் கடல் நீரைக் குடிநீராக மாற்றுவதற்கான செலவும் வெகுவாகக் குறைந்துவிடுமாம்.

அப்போது, சென்னை நகரம் எவ்வளவு மக்கட் பெருக்கம் கொண்டதாகிவிட்டாலும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்கிறார் தாக்கர்.

உடனடியாக சென்னை நகர குடிநீர் பற்றுக் குறையைப் போக்க இந்த 'ஊற்று'களைக் கண்டறிந்து பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தாக்கர் கருதுகிறார்.

✻

அதுவும் அப்படியா!

வெளிநாட்டுத் தலைவர்கள் இங்கு வருகிறபோது அவர்களைப் புன்னகையுடன் வரவேற்று கோலாகல விழா நடத்தினால், அந்தத் தலைவர்கள் தத்தமது நாடுகளுக்குச் சென்று இந்தியா பற்றி மதிப்புடன் பேசுவார்கள், அதன் பயனாக உதவி, கடன் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. பிரான்சு நாட்டு முதல் அமைச்சர் பாம்பாடு இந்தியா வந்திருந்தார் — விழா நடத்தினர்கள் — கூட்டு அறிக்கைகள் வெளியிட்டனர். ஆனால் பிரான்சு திரும்பிய பாம்பாடு, இந்தியா பற்றிமதிப்புள்ள கருத்தைக் கூறியதாகத் தெரியவில்லை. மாறாக வெளிநாட்டவர் கசப்பு கொள்ளக்கூடிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் என்று தோன்றுகிறது.

இந்தியாவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது—பெரிய அளவில்—ஆனால் ஏழ்மையோ மிக மிக வருந்தத்தக்க அளவிலும் முறையிலும் நெளிந்துகொண்டிருக்கிறது.

திட்டங்களை நிறைவேற்றி வைக்கும் மேல் மட்ட அதிகாரிகள் குறித்தும் ஏமாற்றமாக இருக்கிறது—திறமை தேவைப்படும் அளவு அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த இரண்டு கருத்துகளும், பாம்பீடு இந்தியா வந்து போனதால் பிரான்சிலும் மற்றச் சில வெளிநாடுகளிலும் பரவி இருக்கிறது என்று தெரிகிறது. ஒரு பிரன்ச்சு அதிகாரி இந்தியாவுக்கு, திட்ட காரியத்துக்காக "மூளை" கொடுத்துதவ வேண்டும் என்று கூடப் பேசிவிட்டார்!

✻

3-கோடி!

இரயில்வேக்களில், டிக்கட் வாங்காமல் பயணம் செய்வோரின் தொகை பல இலட்சக் கணக்காகி வருகிறது என்றும் இதனால் ஆண்டு ஒன்றுக்கு 3-கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்றும் இரயில்வே துறை அறிவித்திருக்கிறது.

✻

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.